**15.12.2022**

**அ.வ.எண். 146/2018**

**வா.சா.1 ராஜா அவர்களின் 2ம், 3ம், 5ம் மற்றும் 6ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தின் வடக்கு பக்கம் மரங்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் வடக்கு பக்கம் மரங்கள் இருந்ததால் வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தினை சரியாக அளவீடு செய்யவில்லை என்றால் இடைஞ்சலாக இருந்த மரத்தை வெட்டிவிட்டு தான் அளந்தோம். எத்தனை மரங்களை வெட்டினோம் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் சீம கருவேலி மரங்களை வெட்டினோம். தாவா சொத்தினை அளக்கும் போது எந்த மரங்களையும் வெட்டவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மரங்களை வெட்டும் போது வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். தோராயமாக எத்தனை மரங்கள் வெட்டினோம் என்றால் 3 மரங்கள் இருக்கும். தோராயமாக மரங்களை வெட்டுவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 1 மணி நேரம். நான் சொல்வது போல் மரங்கள் எதையும் வெட்டவில்லை என்றாலும் அதனால் தான்

வடக்கு பக்கத்திலுள்ள அளவு தவறாக உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை அளவீடு செய்யும் போது வடக்கு பக்கத்தினை தவிர மற்ற 3 பக்கத்தில் அளவுகள் சரியாக இருந்தது என்றால் சரிதான்.

தாவா சொத்தின் வடக்கு எல்லையை ஒட்டியபடி தளம் போட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். தளம் போட்ட வீட்டின் வடமேற்கு பகுதியில் தாவா சொத்திற்கு வருகிறது என்றால் சரியல்ல. எனவே தான் வடக்கு பகுதியை சரியாக அளவீடு செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வடகிழக்கு மூலையில் 3 சர்வேக்கல் இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வடகிழக்கு மூலையில் சர்வேக்கல் இருந்ததால் தான் சரியாக அளவீடு செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் வடக்கு பக்கம் ஆறுமுகம் மற்றும் அவரது மகன் ராஜரத்தினம் அவர்களின் வீடு உள்ளது என்றால் ஆறுமுகத்தின் மகன் மட்டும் தான் உள்ளார். அவரது வீடும் மனையும் உள்ளது. அவருடைய மனையில் நாங்கள் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளதாக எங்களுக்குள் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். ஆனால் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. அந்த வழக்கில் நான் சர்வேயர் வைத்து அளவீடு செய்வதற்கு இடையூறு செய்ததால்

எனக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு எண் 18935/2017 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கு உள்ளது, ஆனால் நான் எந்த இடையூறும் செய்யவில்லை. மேற்படி வழக்கில் சர்வேயரை வைத்து அளவீடு செய்வதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமனறம் 18.11.2022 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான்.

நானும், எனது தகப்பனார் மற்றும் எனது தாத்தா ஆகியோர் தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்களை அபகரிக்கவேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள் என்றால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக பிரதிவாதியின் நிலத்தினை அபகரிக்கவேண்டும் என்பதற்கு பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் 1ம் பிரதிவாதி மாணிக்கம் சொத்திற்கும் இடையே 3ம் பிரதிவாதியின் 1 செண்டு நிலம் பழைய சர்வே எண் 233/7 இருந்தது என்றால் சரியல்ல. அந்த 1 செண்டு நிலத்தினையும் நாங்கள் ஆக்கிரமித்து பட்டா வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் எனது தாத்தாவிற்கு 4 செண்டு பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல. எனது தாத்தாவின் அப்பா பெயர் செல்லப்பன் நாயக்கர் என்றால் சரிதான். எனது தாத்தா தாவா கிராமத்திற்கு வரும் போது 1ம் பிரதிவாதியின் தாத்தா

1 1/2 செண்டு நிலம் எனது தாத்தாவிற்கு இனாமாக கொடுத்தார் என்றால் சரியல்ல. மாணிக்கம் இடத்தில் கிழக்கு பகுதியில் எனதுதாத்தாவிற்கு இனாமாக கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. எனவே எனது தாத்தாவிற்கு பூர்வீகமாக 4 செண்டு நிலம் கிடையாது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.3 ன் படி ஏழுமலை, வேணுநாயக்கர் மற்றும் புண்ணியக்கோட்டி ஆகியோர்களிடமிருந்து எனது அப்பா கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணத்தையும் மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் எனது அப்பா கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள தளம் போட்ட வீட்டினை யார் கட்டியது என்றால் எனது அப்பா மற்றும் தாத்தா கட்டினார். எப்போது அந்த வீடு கட்டி முடிக்கப்பட்டது என்றால் 2008ம் வருடத்திலேயே கட்டி முடிக்கப்பட்டது.

2008க்கு முன்பு நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் தாவா சொத்திலுள்ள கூரை வீட்டில் குடியிருந்தோம். வா.சா.ஆ.3ல் சொத்து விவரத்தில் காலி மனை என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 எனது அப்பா எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் சொத்து விவரத்தில் காலி மனை என்று தான் குறிப்பிட்டுள்ளது

என்றால் சரிதான். 2008க்கு பிறகு எழுதப்பட்ட வா.சா.ஆ.4ல் வீடு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எனது பிராதுவில் சொத்து விவரத்தில் தாவா சொத்தில் வீடு உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

தவறான வழக்கு சொத்து விவரங்களை குறிப்பிட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் நியமித்து அளவீடு செய்யும் போது வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த சி முதல் ஏ மேற்கிலிருந்து கிழக்காக உள்ள அளவினை 62.8 மீட்டருக்கு பதிலாக 61 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1.8 மீட்டர் நிலம் நிலத்தில் இல்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).